FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301664

1. District : திருச்சி மாவட்டம் PS: அல்லித்துறை காவல்நிலையம் Year: 2026 FIR No.: 16 Date: 20/7/26
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: அழிஞ்சிவிடுதல் - 1988 (திருத்தப்பட்டது 2018) Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17/7/26 Date to :
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : சுமார் 11.00 hrs Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 20/7/26 Time : சுமார் 07.15 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்துமூலமாக அலைபேசி தகவல் அடிப்படையில்
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 55 km தென்மேற்கு
   Beat Number : (b) Address : N. பூலாம்பட்டியில் உள்ள வி. வெரியப்பட்டி
   முறைக் காவல் எண் முகவரி RI அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திருமதி. R. ஸ்வாதி (b) Father's/ Husband's Name : பழனிசாமி
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 30 வயது (d) Nationality : இந்தி (e) Passport No. : -
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : - Place of Issue : -
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : இல்லத்தரசி (g) Address : பாலாம்பட்டியில் நத்தம் தெரு, முனைனூர் தாலுகா, மணப்பாறை
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. சோமமதி, RI, வி. வெரியப்பட்டி பிரிவு, மணப்பாறை தாலுகா., திருச்சி.


8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தகவல் தெரிவிப்பதில் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. ESWARI
20/7/2026

20/7/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/2026-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 20.07.2026ஆம் தேதி பணியில் இருந்தபோது காலை 07.15 மணியளவில் திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், முகவனூர் கிராமம், பாம்பாட்டிபட்டி தெற்கு தெருவில் வசித்துவரும் பழனிசாமி மனைவி புகார்தாரர் திருமதி.ஈஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்தின் அனுமதி பெற்று, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், வி.பெரியப்பட்டி பகுதி வருவாய் ஆய்வாளர் திருமதி.ஹேமலதா மற்றும் புகார்தாரர் திருமதி.ஈஸ்வரி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இன்று 20.07.2026ஆம் தேதி காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.16/2026, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல் ஈஸ்வரி, க/பெ பழனிசாமி, 12/102, பாம்பாட்டிபட்டி, தெற்கு தெரு, அரசங்குளம், முகவனூர் (வடக்கு), மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம். மரியாதைக்குரிய அய்யா, நான் மணப்பாறை வட்டம், முகவனூர் கிராமம், பாம்பாட்டிபட்டி, தெற்கு தெருவில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனது கணவர் டாடா ஏஸ் என்ற வண்டியை வாடகைக்கு ஓட்டி வருகிறார். எனக்கு இரண்டு பையன்கள் உள்ளார்கள். எனது அப்பா கருப்பசாமி கடந்த 1997ம் ஆண்டு இறந்துவிட்டார். நான் அவருக்கு ஒரே மகள். எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் ஏற்கனவே வாங்கிவிட்டோம். எங்கள் அப்பாவிற்கு வையாபுரிபட்டி என்ற கிராமத்தில் சுமார் 7 ஏக்கர் நிலம் உள்ளது. அதனை விற்பனை செய்துவிடலாம் என்று என் அம்மா சின்னபொண்ணு கூறினார். ஆகவே நிலத்தை விற்பனை செய்வதற்கு வாரிசு சான்றிதழ் தேவைப்பட்டதால், எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வாங்குவதற்காக பத்து நாட்களுக்கு முன்பு N.பூலாம்பட்டியில் உள்ள இ.சேவை மையம் மூலம் வாரிசு சான்றிதழ்க்கு விண்ணப்பம் செய்தேன். பின்னர் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக வெள்ளாளப்பட்டி கிராமத்தை சேர்ந்த வி.ஏ,ஓவை சந்தித்து என் வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டபோது, அவர் நான் ரெக்கமண்ட் பண்ணி ஆர்.ஐக்கு அனுப்பிவிட்டேன் அவரிடம் போய் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். ஆகவே 17.07.2026ம் தேதி வி.பெரியபட்டி பகுதி ஆர்.ஐ ஹேமலதா அவர்களை சுமார் 11 மணியளவில் N.பூலாம்பட்டியில் உள்ள அவருடைய அலுவலகத்தில் நேரில் சந்தித்து எனது அப்பாவின் வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டேன். அதற்கு அவர் உங்க அப்பா இறந்து முப்பது வருசத்துக்கு மேல ஆவுது, வாரிசு சான்றிதழ் வாங்குவது அவ்வளவு சுலபமில்ல. கொஞ்சம் மெனக்கேடனும், ஒரு ஐந்தாயிரம் மட்டும் கொடுத்தினா, வாரிசு

சான்றிதழ் கிடைக்க உடனே ரெக்கமண்ட் பண்ணிறேன் என்று சொன்னார். அதற்கு நான் ஐந்தாயிரம் கவர்மெண்ட் பீஸா மேடம் என்று கேட்டதற்கு, அவர் நீ என்ன விபரம் தெரியாத ஆளா இருக்கா. ஐந்தாயிரத்தை எனக்கு தனியா கொடுத்தினா, நான் ரெக்கமண்ட் பண்ணி உனக்கு உடனே வாரிசு சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்சுடுவேன் என்று சொன்னார். என் வீட்டுகாரர் வாடகைக்கு வண்டி ஓட்டி வருகிறார், என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ஒரு ஆயிரத்தை கொறைச்சிகிட்டு நாலாயிரம் தந்தினா உனக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்வேன், இல்லனா இப்படியே அலைஞ்சிகிட்டே கிடக்க வேண்டியதுதான் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் நான் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு அவரிடம் சரிங்க மேடம் பணத்த ரெடி பண்ணிக்கிட்டு திங்ககிழமை வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இதை பற்றி என் வீட்டுகாரரிடம் சொன்னபோது அவர் லஞ்சம் கொடுக்க வேண்டாம், லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார்கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னார். என்னிடம் நாலாயிரம் லஞ்சம் கேட்ட வி.பெரியபட்டி ஆர்.ஐ ஹேமலதா மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx(P.Eswari) 20/7/2026 Sir, Submitted to the Court of Hon'ble Principal District and Sessions Judge, Trichy. Received this report at 07.15 hrs., on 20.7.2026 and obtained permission from DVAC. Made Confidential Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.16/2026, u/s 7 of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.00 hrs., on 20.7.2026. Sd.xxx (A.PRASANNA VENKATESH) 20/7/2026 Inspector of Police, V&AC, Trichy.

20/7/2026
[A. PRASANNA VENKATESH]
Inspector of Police,
V&AC, Trichy.